
# மாணிக்கப் பரல்கள்



குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கப் பரல்கள்

குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன்

**வெளியீடு:**

குரும்பசிட்டி நலன்புரி சபை - கனடா
ரொறன்ரோ - ஒன்ராறியோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கப் பரல்கள்

(கவிதைத் தொகுதி)

| | |
|---|---|
| முதற் பதிப்பு | யூன் 2008 |
| நூல் ஆசிரியர் | குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன் |
| பதிப்புரிமை | மோகனா ஜெகதீஸ்வரன் |
| கணனி வடிவமைப்பு | பெங்குயின் கிறாபிக்ஸ்(Penguin Graphics) |
| அச்சமைப்பு | விவேகா அச்சகம் |

**வெளியீடு:**

குரும்பசிட்டி நலன்புரி சபை - கனடா
ரொறன்ரோ - ஒன்ராறியோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்:

**வைரவிழாக்காணும்**
**மென்மையான என் அம்மாவிற்கு......**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரல்கள்


தமிழாசான் இரா. சம்பந்தன் அவர்களின் அணிந்துரை i

"தேன்தமிழ்த் தென்றல்" எஸ். ஜெகதீசன்
அவர்களின் மதிப்புரை v

எம்மவர்களோடு xii

மாணிக்கப் பேழை 1

ஐயா.......என் துரையே 2

வாழ்த்தி வணங்குகின்றேன் நீடு வாழி 3

மாரியம்மா மீண்டு வாருமம்மா 4

வல்லமை தாராயோ 7

தேசத்தின் முதற் பொருளே 9

மாவீர தெய்வங்களே 11

நாற்றிசையும் உங்கள் தாள் தொட்டு இறைஞ்சுதையா 12

தமிழ்ச் செல்வா நின்னையே தந்தனையோ! 14

வீறுகொண்டெழ வேண்டும் 17

ஓ என் கனடாவே 19

சித்தாந்தமும் சித்துவேலையும் 21

மாண்புடையோர் மட்டே 24

ஏற்றிப் போற்றுவோம் இணைந்து முன்னேறுவோம் 26

அழகே..........அழகு 28

வலிய மனங்கள் மாறிட வேண்டும் 30

சறுக்கல்கள் 32

செக்கச் சிவந்த........ 33

சைவமும் தமிழும் 36



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழாசான் இரா. சம்பந்தன் அவர்களின் அணிந்துரை

நெருஞ்சி தெரியும். நெடுவான நிலாத் தெரியும். குறிஞ்சி மலை முகட்டில் கூத்தாடும் மலர் தெரியும். உறிஞ்சிக் கூழ் குடிக்கும் உருக்குலைந்த முகம் தெரியும். கரும்பில் விடம் தடவும் கதையெல்லாம் தெரியவரும். விரும்பிப் படிப்போர்க்கு இக்கவிதைக் களஞ்சியத்தை!

ஆம்! சிறு வயது முதற்கொண்டு சிறுகதையும் நடிப்பென்றும் உறு முயற்சித் தடாகத்தில் ஊறிய வேர் பயிராகித் தாமரையாய்த் தண்டாய்த் தடல் நீண்ட தண் இலையாய்க் கவிதைக் கிழங்காகக் கற்போர்க்கு ஒளியாக சொற்போரில் வென்று சுகம் கொடுக்கக் காண்கின்றோம்.

மண்ணில் மனம் கிடக்க மனம் பதிந்த காட்சியெல்லாம் கண்ணில் கனம் பிறக்க கவியாகக் காண்கின்றோம். வாழ்த்தி வணங்குகிறேன் நீடு வாழி என்று ஒரு தலைப்பில் கவிஞர் ஜெகதீஸ்வரன் நமக்கொன்று சொல்கின்றார்.

மண்ணுக்கு மணம் சேர்க்க மாறுபட்ட பூவினத்தை எண்ணிக் கணக்கெடுத்து இளந்தென்றல் தடவிவரும். இங்கே பண்ணில் படிப்புலகில் பக்திப் பரவசத்தில் புண்ணில் படிந்த சீழ்ப் போலிகளின் புரை அகற்றி விண்ணில் வாழ்பவர்கள் விடுதலைக்கு உழைப்பவர்கள் கலையும், கலை உரைத்த, கலைத் தேர்கள் செய்தவர்கள் என்று மண்ணுக்கு உழைத்தவரை மதிப்பளித்துப் பாடுகிறார்.

கல்வியறிவூட்டியெம் மனக்கண்ணைத் திறந்து வைத்த
பொன்னர் பரமானந்தர் புகழடி போற்றி

எனத் தொடங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றிங்கு மண்ணுக்காய் உழைத்தோர் அனைவரையும்
மனமார வாழ்த்தி வணங்குகிறேன் நீடு வாழி

என்று முடிக்கின்றார்.

கல்விக்கு மொழிக்கு கலைக்குத் தொண்டாற்றிச் சொல்லுக்கு இலக்கணமாய் சுகம் கொடுத்தோர் பற்றியிந்தக் கவிதை பிறந்தாலும் பிறப்புக்கு அப்பால் மறைப்புக்குள் கிடக்கின்ற கவிஞர் மனம் தெரிகிறது.

திருத்தொண்டர் தொகை வகுத்த ஆரூரர் இறுதியிலே, அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன் என எப்போதோ சொன்னது போல் இன்றும் எம் கவிஞர் மற்றிங்கு மண்ணுக்காய் உழைத்தோர் என்கின்றார்.

பெயர் குறித்து சொல்லாத பெரியோரை நினைத்தொருகால் உயர் மனதால் வாழ்த்துவது திருத்தொண்டர் உத்தி முறை. துயர் நிறைந்த நாட்டுத் தூரிகைக்கு மனம் முழுதும் உயர் பண்பு நிற வண்ணம் ஊற்றெடுத்தது எப்படியோ? படியுங்கள் மேலும். பண்புயரும் வாசகர்க்கு!

வல்லமை தாராயோ பாரதியார் சக்தியிடம் கேட்டார் மாநிலத்தை வாழ்விக்க. நமது கவிஞரோ ஊர் உறையும் மாரியிடம் வேண்டுகிறார். மண்ணை விடுவிக்க.

வல்லமை தாராயோ எம்மண்
விடிவினைக் காண்பதற்கு
இல்லார் உள்ளார் அனைவரையும்
அடித்தும் உதைத்தும் துன்புறுத்தி
கல்மனக்காரர் கடத்தி வைத்து
கப்பம் பெறுதல் குறைவுபெற
சொல்லடி மாரித்தாயே நீ
வல்லமை எமக்குத் தாராயோ

இந்தப் பாடலைப் பாருங்கள். உள்ளவனும் அடிபட்டான். உடுக்கத் துணிபுடவை இல்லையெனும் இடர்ப்பாட்டில் உள்ளவனும் அடிபட்டான் என்கிறார் கவிஞர். அங்கே ஆண்பெண் பேதமில்லை அடித்து வதைப்போர்க்கு. அரங்கின்றி வட்டாடும் அவலப் போக்கிடையே தரங்குன்றிக் கடத்தும் தைரியந்தான் அரசாளும். பசுவுக்காய் மகன் கொன்ற பச்சைத் தமிழ் நீதி கொசுவுக்கு குற்றேவல் முறை செய்து உயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழைக்கும்.

நாடு பறிபோனதனால் நடந்தவைகள் தானெண்ணிக் கோடு விட்டு வழுவாத கனடாவைப் பார்க்கின்றார் கவிஞர் இங்கே. ஆதங்கம் வருகிறது. அறம் பிறழ்ந்த நாட்டு அகதிக்கு இடமளித்த திறம் தெரிந்த நாடே திரவியமே தெய்வமே நிறம் பிறழ்ந்து பார்க்காமல் நீ நீட்டும் கைத்தடத்தில் உறவறுந்த ஊனங்கள் உறங்குகிறோம் ஆனாலும் ஊரில் குண்டு உதிர உறவெல்லாம் ஓலமிட காரில் நாம் வலம்வந்து வாழ்வதிலே என்ன பயன்?

நீதித் தீர்த்தத்தில் நீ நீந்திப் பயனில்லை. தேதி பிழைக்காது பணம் தந்தும் பயனில்லை. பாதித் துயர் துடைக்கும் பக்குவத்தால் பலனில்லை. சோதித் திருவிளக்கே சொல்லிவிடு ஒருவார்த்தை. துன்பப் படகிருந்து துயர்வலிக்கும் தமிழினத்தை இன்னல் படுத்தாதே இலங்கை அரசே நீ . இதைச் சொல்ல மாட்டாய் நீ. புண்ணுக்குப் புனுகும் புது நோவுக்கு ஒத்தணமும் பண்ணிப் பலனில்லை.

கவிஞர் பாடுகிறார்

விஞ்சிடும் அடக்கு முறை வேரோடு அழிக்கும் முறை
அஞ்சித் தவிக்கின்ற அப்பாவித் தமிழர் குறை
நெஞ்சை அடைப்பதனால் நிலைகுலைந்து கேட்கின்றேன்
கொஞசமேனும் பார்த்தால் குறைந்தாநீ போய்விடுவாய்?

நெக்குருகி நெக்குருகி நினைவிழையை நெய்பவனே சொக்கும் கவி படைக்கும் தொழிலில் சிறந்தவனாம் என்ற அம்மையின் வரிக்கு கவிஞர் உதாரணமாகி விடுகிறார்.

கரிக்கோட்டில் இமயத்தைக் காட்டுதல் போல் கற்பனையின் வரிப்பாட்டில் புவி வாழ்வை வடித்தால் அது கவிதை.

மணல்பறக்க வறண்டு விட்ட மனிதமனம் குளுமையுறப் புனல் நிறைக்கும் நதியாகப் பொழிந்தால் அது கவிதை.

கேடுகெட்ட சமுதாயக் கீழ்மையெலாம் கீழ்மையுறப் பாடுபட்டு நிற்பவனைப் படைத்தால் அது கவிதை,

ஓட்டைக் குடிசையிலும் உன்னதத்தைக் காணவழி காட்டியொரு நிம்மதியைக் கனிவித்தால் அது கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சழக்குடைய சாதிகளும் தன்னலத்து வாதிகளும் வழக்கறுந்து போகவழி வகுத்தால் அது கவிதை.

கைப்பிடித்து வாழ்வுதரும் கட்டழகுப் பெண்மயிலாய் எப்பொழுதும் நெஞ்சில் இடம்பிடித்தால் அது கவிதை.

ஆம்! அம்மை சொன்ன கவிதைக்குரிய இயல்புகள் எல்லாம் அமையப் பெற்றது இந் நூல். கவிஞர் செம்மையானவர். அதனால் படைப்பும் செம்மையானது. எதுகையும் மோனையும் எழுந்து விளையாடும் ஆக்கங்கள்! ஓசை நயமும் ஓயாத போர் முகமும் தேச விடுதலையும் தேன் தோய்ந்த காதல்களும் என்று இலக்கியத் தடாகமாக விளங்கும் இந்நூலைத் தந்த கவிஞர் ஐயாத்துரை ஜெகதீஸ்வரன் தமிழ் உலகால் போற்றப்படுவார். இன்றும்! என்றும்!

"இன்பத்தமிழ் ஊற்று" இரா. சம்பந்தன்
ஜூன் 07, 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தேன்தமிழ்த் தென்றல்" எஸ் . ஜெகதீசன் அவர்களின் மதிப்புரை

மாரிதாசன் - மாணிக்கதாசன் - மோகனதாசன் மோகனா - தமிழ்ச்செல்வன்
எனப்பல புனை பெயர்களுள் புகுந்து தனது மாணவப்பிராயம் முதலே எழுதிடினும் ஊரின் ஆதிக்கம் தன்னுள் அதிகம் என்பதனை இதயத்தில் பதிப்பதில் முன்னணி வகிக்கும் பெயர் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன்.
வாழ்விலிருந்து பெயர்க்கப்பட்டு வார்த்தைகளாக வனப்புப்பெறும் மண்ணின் மகிமை
கிராமியப் புழுதி மண்ணில் புரண்டெழும் சுகானுபவத்தை படிப்போருக்கு ஈர்ந்து அவரது இலட்சிய வானத்தை இலகுவில் எட்ட வைக்கின்றது.
மற்றவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்கும் மென்மையான உள்ளம் கொண்டவர்.
நியாயத்திற்குப் புறம்பான விடயங்களில் கண்டிப்பும் கறாருமாகக் கொந்தளிப்பார்.
அவர் கோபப்படுவதில் ஓர் அளவும் இருக்கும். ஓர் அழகும் இருக்கும்.
பொது இடங்களில் அநீதி கண்டால் வெடிப்பார். எதிரிகள் அந்த ஆச்சரியஅதிர்ச்சியால் மனதுக்குள் உறுமிக்கொண்டே வெளியில் சிரிப்பார் .
அடுத்தவன் பென்ஸிலை அதற்கும் அடுத்தவன் எடுப்பதைக் கூட அடுக்கும் செயலாக சிறு வயதிலேயே அவர் கருதியது இல்லை. அப்பொழுது அவர் வார்த்தைகளில் பிடித்த தீ அவரது ஆசிரியர்களுக்கும் அன்றே பிடித்ததாம்.
இந்த சமூகப் பிரக்ஞை - வளர வளர அவரது எழுத்துகளுக்கு உயிராதாரமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவு திறந்தது - அவரது இதயக்கதவைத் திறந்து வைத்த முதலாவது கவிதை.
எழுந்தமானக் கவிதையாக தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் எட்டாவது வகுப்பில் அரங்கேறியது.
19 வயதில் அவர் எழுதிய முதலாவது கதை - கறுப்புப்பால். குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் மன்றத்தின் சன்மார்க்க தீபத்தில் வெளிவந்தது.
நன்கு காய்ச்சி எடுத்ததில் ஊரிலிருந்த ஊழல் பேர்வழிகள் பொங்கி வழிந்து பின் தணிந்தனர்.
2000 ஆண்டு கனடா குரும்பசிட்டி நலன்புரி சபையால் பிரசுரம் பெற்றது முதலாவது சிறு கதை தொகுப்பு
**இங்கேயும் மனிதர்கள்.**
ஆகா - இதோ ஒரு மனிதன் என படித்தவர்களை சொல்ல வைத்தது.
இலங்கை இந்தியா பிரான்ஸ் கனடா என எழுதுவதை அவர் தொடர புகழும் பிரபலமும் போட்டி போட்டு கொண்டு அவரைத் தொடர்ந்தன.
தீர விசாரித்து ஆழமாகச் சிந்தித்து கற்பனைக்கு வடிவம் கொடுக்கும் அவரது பாணி நெஞ்சில் நிலைத்தது.
எல்லையை கடந்திடினும் எல்லை மீறாத வார்த்தைகளும் ஒளிவு மறைவற்ற தெளிவான சொற்பிரயோகமும் இனிமையாய் எங்கும் பரந்து விரிந்தது.
கவியரங்கம் - மேடைப்பேச்சு நாடகம் என்பனவும் அவரைத் தம் வசமாக்கின.
சமுதாய சிந்தனையிலும் பொது நல எண்ணத்திலும் மேம்பாடுடைய அவர் திட்டமிட்டுத் திட்டம் தீட்டுவதில் சமர்த்தர்.
எடுத்த காரியத்தை செவ்வனே முடித்திடும் திறமை அவரிடம் உண்டு என்பதற்கு
ஒரு சின்ன எடுத்துக்காட்டைப் பார்ப்போமா ?
உழைப்புக்கும் முயற்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் சீர்திருத்தச் சிந்தனையை அவரது பாத்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தரிப்பதற்கும் இது கூட அடிப்படைதானோ ?
வெந்து நொந்து நைந்து போயிருந்தார் பண்டாரவளையை சோர்ந்த ஓர் ஏழை வயோதிப விதவைத்தாய்.. பாதி மறைக்கப்பட்ட பாதி மறுக்கப்பட்ட ஆவணங்களால் கணவரது ஓய்வூதியம் முழுமையாக நிராகரிக்கப்படக் கூடிய ஒரு நிச்சயமற்ற நிலையில் மகளின் திருமணம் நிர்ப்பந்தமாக நிச்சயிக்கப்பட்டிருந்ததே அதற்கு மூல காரணம்.
அந்தத்தாயின் கண்ணீரும் வற்றிவிட்ட ஒரு நாளில் அவரிடம் இரத்தமே புதிதாக ஊற்றெடுக்க வைத்து நிமிர்ந்தவர் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன்.
மற்றவரது வேலைகளையும் மின்னல் வேகத்தில் தனது கடமை போல் முழக்கமின்றி தானே செய்து முடித்ததில் நான்கு வருடங்களுக்கும் மேலாக நிலுவையிலிருந்த ஓய்வூதியம் நான்கு மணித்தியாலங்களுக்குள்ளாக அத்தாயின் கரங்களில் சிரிக்க ஆரம்பித்தது.
சந்தோஷ மிகுதியால் சந்தோஷம் கொடுக்க விரும்பினார் அத் தாய்.
அலுவலகத்துக்குள் எவருக்கும் தெரியாமல் கொடுத்தார். - எல்லோருக்கும் தெரிய வாங்கிக் கட்டிக்கெண்டார்.வெளியே காத்திருந்து நீட்டினார். - தாட்சண்யமின்றி நிராகரிக்கப்படவே சுருண்டார். நடை பாதையில் அவர் முன்பாக காசு கட்டை வைத்து விட்டு ஓடி ஒளித்தார்
நடைபாதை ஓடுபாதையாகி காசுக் கட்டு எட்டாத கட்டையாக மாறியதில் அசந்தார்.
இறுதியாக பணத்தை அவர் முன் பரப்பினார். உறுதியாக மறுத்த உயர் பண்பை மனதில் நிரப்பினார்.
அந்த உதாரணகுணத்தால் நனைந்த அத்தாயின் கண்களிலிருந்து பொழிந்தது அடைமழை !
புடவைச்சிறு கைத்தொழில் அமைச்சில் பணி புரிந்த சபலங்களும் சலனங்களுமற்ற அவர் அதி உயர் சம்பளமாக அன்றும் இன்றும் என்றும் கருதுவது முன் அறிமுகம் எதுவுமற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வயோதிபத் தாயின் கண்ணீரில் தோய்ந்த

உன்னதமான உத்தமமான அந்த அன்பைத்தான்.
இந்த மனிதநேயம் அவரது எழுத்துக்களில் நன்கு பரவிப்படர்ந்து பரவசமூட்டுகின்றது..
பிறந்த குழந்தை அழுவதும் பிரசவித்த தாய் சிரிப்பதும் வழமை.
ஆனால் இன்று வரை நினைவு வரும் வேளையெல்லாம் அழுஅழுவென்று அத்தாய் அழுவதும்
வளர்ந்து விட்ட அந்த மகன் அத்தாயைப் பார்த்து இது வரை சிரி சிரியென்று சிரிப்பதும்
அவரது சமூக சேவையின் வெற்றிக்குக் கிடைத்த நினைவுச் சின்னமாகும்.
அப்பொழுது அவர் மொன்றியலில் தமிழர் ஒளி நிர்வாகியாக இருந்தார். வரவு செலவு திட்டத்தைத் தயாரிப்பதற்குப் பொறுப்பாளரான அவர் தாமதத்துக்குப் பொறுப்பாளரல்ல என்பதால் நிதி நெருக்கடி தாமதமின்றி உருவாகியிருந்தது.
எதிர்பார்க்கப் பட்டதிலும் முன்னராகவே அவரது மனைவிக்கு பிரவச வலி ஏற்பட்டதால் நேரநெருக்கடி வீட்டில் விரைந்து உருவாகியிருந்தது.
மனைவியின் தொலைபேசி அழைப்பு விரைந்து வருமாறு கோரியது.
அறிக்கைக்காகக் காத்திருந்தவர்களது அழைப்பு விரைந்து தருமாறு கோரியது.
டாக்ஸியில் ஆஸ்பத்திரிக்குப் போகுமாறு உற்றவரிடமும், டாக்ஸியில் நிதி அமைச்சின் அலுவலகத்திற்கு வருவதாக மற்றவரிடமும், தமிழர் ஒளி காரியாலயத்திலிருந்தவாறே தெரிவித்தார்.
உடனே மனைவி மருத்துவ மனைக்கு போய்விட்டார்.
தடங்கலால் அவர் அமைச்சகத்துக்கு போகவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்பத்திரியிலிருந்து போன் கண்ணீருடன் வந்தது. அமைச்சக போன் கண்ணீரை வர வைத்தது.
பிறந்த பிள்ளை கூட அழுகை மறந்து அழகாய்ச் சிரிப்பதாக அழுகையுடன் மனைவி தெரிவித்தார்.

வரவு செலவு அறிக்கையும் பிறந்ததாக அழுகையை மறைத்து சிரிப்புடன் அமைச்சுக்கு அறிவித்தார்.
வரவு செலவு திட்டத்தை பார்த்தவர்கள் வரலாற்றில் இது போல அழகானதைப் பார்த்ததில்லை என்றார்கள்.
ஆஸ்பத்திரியில் அவரது மனைவியும் அதனையே கூறியிருப்பார் என்றா எதிர்பார்க்கின்றீர்கள் ?
அருகிலிராத மனத்தாங்கலில் அன்று முழுவதும் பெருகிய கண்ணீர் நினைவுவரின் இன்றும் சிரிப்புடன் பிரவாகிக்கும்.
வீட்டிற்கு அவரால் பெறுமதி மிக்க ஆஸ்தி சொந்தமாக கிடைத்தது.
சமூதாயத்திற்கு அவரால் பெறுமதி மிகுந்த 93000.00 டொலர் சொத்தாக கிடைத்தது.
கனடாவில் இலக்கியக் கூட்டங்களுக்கு எப்பொழுதாவது செல்லும் போது
புதிதாக அறிமுகமாகுபவர்களிடமிருந்து இரண்டு கேள்விகளை எதிர் கொள்வேன்.
முதலாவது நீங்கள் ஜெகதீஸ் தானே என்பது. அடுத்தது நீங்கள் குரும்பசிட்டியா என்பது.
இரண்டிற்கும் ஆம் என்பது எனது பதிலானால் ஆள் மாறாட்டம் தெரியாமலேயே
அவரது நூற்றைத் தொடும் படைப்புகள் பற்றி நெஞ்சை தொடும் வகையில் ஆராதிப்பார்கள்.
ஆகா ! சும்மா வரும் புகழுக்குக்கூட எவ்வளவு வீரியம் என என்மனம் மருகும்.
இரண்டு கேள்விகளிலும் இரண்டாவதிற்கு மட்டும் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால்
இங்கே என்ன வேலை என்ற மறு கேள்வி என்னைத் தாக்கும்.
இலக்கியக் கூட்டத்தில் எனக்கென்ன வேலை என்கிறார்களா
அல்லது
நிஜத்திலே எனக்கு என்ன வேலை என்ற அக்கறையா என
மயங்கும்.

அவரது புகழையோ அவரது பிரபலத்தையோ கவர்ந்து
கொள்வதில் அற்பமாய்ச் சந்தோஷப்படுவேன்.
இதை அவரிடம் சொன்னால் இதயம் நிரம்பச்சிரிப்பார். அதில்
மனது மிகவும் குதுகலிக்கும்.
சமயநெறிகளில் ஆழ்ந்த பற்று உள்ள அவர் சாக்தேய
ஆராதனையில் மேம் பட்டவர் என்பதற்குச் சான்று
சான்று அவரது அருள் பாலிக்கும் புனை பெயர்கள். ஊரின்
தெய்வம் உயிரின் தாய் உறவின் மனைவி
என மூன்று பெண் தெய்வங்களுக்கு தாசனாய் வரம்
பெறுகின்றார்.
ஒரு கிராமத்தானுக்கு தெரிந்திருக்க வேண்டிய அத்தனையும்
அவருக்கும் தெரியும்.
மண்ணைத் தொட்டு எழுதுகின்றார். மனதை தொட்டு
எழும்புகின்றார்.
கொலு வீற்றிருந்த குரும்பை நகர் - வரலாற்றுத் தேவை
ஒன்றை முன் எச்சரிக்கைஉணர்வுடன் தொகுத்து
ஆணித்தரமாகப் பதிவு செய்யும் காத்திரம் மிக்கதொரு காகித
கல்வெட்டு. முதலில் இத் தொகுதியின் பெயர்
செம்மண்ணின் செழுங்கிளைகள் என்றிருந்து மண்ணின்
நிறத்தை இதயத்தில் அப்பியது. தற்பொழுது
பெயர் மாறிடப் பவுடர் பூசிக்கொண்டு கொலு வீற்றிருந்த
குரும்பை நகராக இன்று வெளி வருகின்றது.
தாயாரின் பெயர் சொல்லும் மாணிக்கப்பரல்கள்.
75 வயது நிறைந்த தாயாருக்கு பரிசாக மூத்த மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசவிக்கும் முதலாவது கவிதை நூல்.
நாக்கின் மேல் நின்ற நல்ல தமிழால் மூக்கின்மேல் விரல் வைக்க மகன் தரும் வைரமான படைப்பு இது.
நெருப்புக்கு வாய் முளைத்தது போல் பல கவிதைகளுடன் மண்ணில் மறைந்து போன தன் பழைய அடையாளங்களை வலி மறந்து தேடுவதால்ஊர் உறவாகின்றது. உறவு ஊராகின்றது. மண்ணில் மறைந்து போன தன் பழைய அடையாளங்களை வலி மறந்து தேடுவதால்ஊர் உறவாகின்றது. உறவு ஊராகின்றது.
நிறைய இடைவெளி இல்லாமல் மனங்களில் நிறையத் தொடங்கும் மாணிக்கப்பரல்கள் என்பது உறுதி.
குரும்பசிட்டியின் விரிவான வாழ்வியலை அவரது எழுத்துக்கள் காவியமாக எதிர்காலத்தில் எதிர்கொள்ளும் .
அதில் அந்த சுருட்டுப் புகையிலையின் புத்துணர்ச்சி வாசமும் என்றோ ஒருநாள் புகைந்தெழும்.
அந்த என்றோ ஒரு நாள் எப்போதோ?
அன்று அங்கு குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் நடமாடும் சத்தம் உலகெங்கும் உரமாக கேட்கும்.
அதில் நெஞ்சம் உருகும்!
வாழ்க பல்லாண்டு.

இளவாலை எஸ். ஜெகதீசன்
06.06.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மவர்களோடு

எம்மவர்கள் அனைவர்க்கும் அன்புகலந்த வணக்கம்.

1966ம் ஆண்டிலிருந்து நான் கவிதை எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருந்த பொழுதிலும் இப்போதுதான் ஒரு கவிதைத் தொகுதியை வெளியிடும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இக்கவிதைத் தொகுப்பு இப்போது வெளியாவதற்கு மிக முக்கிய காரணியாயமைந்தவர் எனது அன்னை திருமதி. மாணிக்கம் ஐயாத்துரை அவர்கள்.

என் அம்மா 75 வயதினைப் பூர்த்தி செய்யும் இவ்வைரவிழா நாளில் அவரது மகனாய், அவருக்கு ஏதேனும் ஒரு பயனுள்ள பரிசினை வழங்க விரும்பியதன் பேறே இந்நூல்.

இது இவ்வாறிருப்பினும், தொகுப்பில் முதலாவது கவிதை மட்டுமே அவரைப் பற்றிப் பேசுகின்றது.

என் தாயார் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து தன் முயற்சியால் "பால பண்டிதர்" பரீட்சைக்குத் தன்னைத் தயார் செய்த நிலையில், பெற்றோரின் வற்புறுத்தலால் பரீட்சைக்குத் தோற்றாது அதே "மாணிக்கமாய்" இருப்பவர்.

மேலும், என் கிராமத்து அபிவிருத்திச் சங்கம் மணிவிழாக் காணும் இதே தினத்தில் "கொலுவீற்றிருந்த குரும்பை நகர்" என்ற வரலாற்றுப் பதிவும் என் அன்னையின் வைர விழா நாளில் "மாணிக்கப் பரல்கள்" என்ற கவிதைத் தொகுப்பும் வெளிவருவது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

என்னைப் பெற்ற மாணிக்கத் தாயாருக்கும்
நான் தவழ்ந்த பொன்வயற் தாயாளுக்கும் ஒரே நாளில் நிகழும் விழாவில் ஒரு சேர நூல் படைத்திடும் பாக்கியம் இவன் ஒருவனுக்கே வாய்த்திருக்கும் பெரும் பேறென எண்ணி இறும்பூதெய்துகிறேன்.

"என்னை இவர்கள் நன்றாய்ப் படைத்தனர்
தம்மை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே"

"மாணிக்கப் பரல்கள்" கவிதைத் தொகுப்பு மாதா, பிதா, குரு, தெய்வம், நாடு, உலகம் எனப்பரந்து விரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாணிக்கப் பரல்கள்" அழகு சொரிகிறதா? அறிவைச் சுரக்கிறதா? பரல்களைப் பார்த்துச் சரியாய்ப் பொருத்துவோர்க்குப் புரியுமென நம்புகின்றேன்.

இம் மாணிக்கப்பரலுக்குப் பட்டை தீட்டி ஒளியேற்றிய பலரை நான் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது.

மாணிக்கப்பரலுக்கு மதிப்புரை தந்து மகிழ்வித்தவர் தெள்ளு தமிழினைத் துள்ளி விளையாட வைக்கும் இளவாலை எஸ். ஜெகதீசன் அவர்கள்.
அணிந்துரை என்ற பெயரால் ஓர் அற்புதம் நிகழ்த்திக் காட்டியவர் பணிவே அணி செய்யும் பண்டிதர் இராசையா அவர்களின் சத்தியப் புத்திரன் சம்பந்தன் அவர்கள்.

பின்புற அட்டையை பண்புற ஒளிரச் செய்ய வேண்டி, பின் இரவில் நான் விடுத்த வேண்டுகோளையேற்று செவ்வனே நிறைவேற்றித்தந்தவர் தமிழர் தகவற் களஞ்சியத்தின் முதன்மை ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் அவர்கள்.

இரவிரவாய்க் கண்விழித்து இரண்டு மூன்று நாட்களில் கணனிப் படிவம் செய்து மாணிக்கப் பரல்களுக்கு இறுதி வடிவம் கொடுத்த "பென்குயின் கிறாபிக்கிஸ்" நண்பர் சிவா. பாஸ்கரன் லலிதா இணையர்.

அழகுற அச்சுப் பதிவு செய்து தந்த "விவேகா" அச்சகத்தினருக்கும் இன்னும் செல்வி மஞ்சுளா இராஜலிங்கம், திரு. த. சிவலிங்கம் ஆசிரியர், எனது மகள் ஆஷ்லி, மகன் அஜந்தன் என்னையே தன்னுயிராகக் கருதும் என் மனைவி மோகனாவிற்கும், இந்நூல்களை வெளியீடு செய்யும் குரும்பசிட்டி நலன்புரி சபை யினருக்கும் எனது படைப்புகளை வாங்கி நுகருகின்ற வாசகப் பெருமக்களுக்கும் இன்னும் இங்கு பெயர் குறிப்பிட மறந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து **"மாணிக்கப்பரலை"** மனதாரச் சுவைக்க வழிவிட்டு அமைகின்றேன்.

வணக்கம்

என்றும் எம்மவர்களோடு
**குரும்பசிட்டி ஐயாத்துரை ஜெகதீஸ்வரன்**
8 - Stepping Stone Trial
Scarborough
Ontario - M1X 2B4
Tel.: 416 754 0089
e mail: jegaiyathurai@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கப் பேழை

கண்ணுக்குள் எனை வைத்துக்
காப்பாற்றினாலோ
கண் ணிமைதீண்டி யென்மேனி
புண்ணாகுமென்று
தன்னுக்குள் தான் வைத்துத்
தண்ணீரில் தாங்கியிம்
மண்ணுக்கு அழைத்து வந்த
மாணிக்கப் பேழை

என்னை வளம்படுத்தத்
தன்னையே தான் வருத்தி
அன்னை என்ற வார்த்தைக்கு
அடையாளம் காட்டியவர் - தன்
கண்ணாளன் மனம் நோகக்
கடுகளவும் இடம்கொடாப்
பண்பாளி, பாசத்தைச் சுரப்பதிலோ
மாணிக்க கங்கை

அன்னை தந்தை இருவரையும்
அவர் ஆயுள் பரியந்தம்
உம்மோடு சேர்த்து வைத்து
உவப்பாய்க் கடமை செய்தீர்
என்ன துன்பம் வந்த போதும்
நன் மாமன், மாமியர்க்கும்
கண்துஞ்சாத் தாதியான
காருண்யப் பெட்டகமே

அன்பினைச் சொரிகின்ற
ஆனந்த ஜோதியே
பண்பின் உறைவிடமே
பாசத்தில் பௌர்ணமியே
வாசநிலவே - அம்மா
வைரவிழாக் காணுநாள்
ஆசையுடன் தாள் பணிந்து
அகமகிழ்ந்து வணங்குகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயா.....என் துரையே

பால் நினைந்தூட்டும்
தாயினைப் போலவென்
ஊனினிற் கலந்திடத்
தேன்தமிழினையூட்டி
யானுமைப்பாடவும்
நற்றமிழ் பேணவும்
காரணராய் அமைந்த
கற்பகதருவே துரையே

சமத்துவக் கட்சியொன்றே
சரியென நானலைந்தவேளை
சண்டித்தனம் செய்துசிலர்
சரியாய் வதைத்தபோதும்
எண்ணியவாறெழுதி - என்
"கறுப்புப்பால்" கதையானகாலும்
"கண்ணியமனிதர்" செய்த
"காரியம்" பொறுத்தீரையா

மாரியம்மன் கோவிலே
மனஅமைதி தருமென்று
தேர்ந்துநீர் சேர்ந்தங்கு
திருவினைகள் செய்துவந்தீர்
ஊருக்குள் கொள்ளையென்று
யாபேரும் கலங்கிநிற்க
நீராகச் சென்றெதிர்த்து
நிமலனடி சேர்ந்தீரே

வாழுகின்ற மக்களுக்கு
வாழ்ந்தவர்கள் பாடமென
நீளநினைந்தும்மை
நித்தமும் துதிக்கவைத்து
தோன்றாத் துணையாயித்
தோற்பைக்குள் நிற்பவரே - சிரம்
தாழ்த்திவணங்குகின்றேன்
சிரஞ்சீவித் தந்தையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தி வணங்குகிறேன் நீடு வாழி!

எண்ணுக் கணக்கின்றி எம்மூர்க்குப் பொருளீந்த
சின்னர் சட்டம்பியார் சேவடி போற்றி!
நுண்ணிய ஆய்வினாலே தொல்தமிழ் மூகராதி செய்ய
எண்ணிய முத்துக்குமாரரே போற்றி!
கல்வியறிவூட்டியெம் மனக்கண்ணைத் திறந்துவைத்த
பொன்னர் பரமானந்தர் புகழடி போற்றி!
நூற்றுக்கு மேற்பட்டு தமிழ் நூலினை வெளியிட்டெமை
ஆற்றுப்படுத்திய பொன்னைய வள்ளலே போற்றி!

திண்ணிய மனத்தொடு இலக்கியப் பணிகள் செய்த
திருச்செவ்வேள் செந்திநாதரே வாழி!
அண்டிய மக்களின் ஆக்கினைகள் தீர்த்துவைத்த
பண்டிதர் நடராசப் பெருந்தகை வாழி!
தொல்பொருள் சேர்த்துத் தொண்டுசெய் மாமனிதர்
செல்வரத்தினக் கலைஞானி வாழி!
அல்லும் பகலும் நல்நாடகக் கலைக்குழைத்த
கலைப்பேரரசர் பொன்னுத்துரை வாழி!

சிற்பமும் சித்திரமும் சிறப்புறக் கற்றுத்தேர்ந்துநல்
சித்திரத் தேர்கள்தந்த கலாகேசரி வாழி!
பற்றுறை விற்பன்னர் பழகுதற்கினிய ரெங்கள்
நற்றமிழ்க் கவிநாயகர் கந்தவனம் வாழி!
முற்றாய்த் தம் வாழ்வைத் தமிழாவணத் தேடலாக்கிவேறு
பற்றிலாக் கனகரத்தினம் இணையரே வாழி!
கற்றுத்துறை போந்த செந்தமிழன் தேசாபிமானி
கணபதிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் வாழி!

முற்றிலும் வேறுபட்ட முற்போக்குச் சிந்தனாவாதி
சிறுகதைச்சித்தரான முத்து திருநாவுக்கரசு
வெற்றியே அன்றி வேறொன்றறியாப் பெரியோன் ஊர்ப்
பற்றிலே ஊறிப்போன சின்னத்துரை நடராசா
சற்றும் பிசகிடாச் சமூகச் சிந்தனையாளன் மற்றுப்
பற்றிலாத் தோழன் வடிவேலர் கிருஷ்ணசாமி
மற்றிங்கு மண்ணுக்காய் உழைத்தோ ரனைவரையும்
மனமார வாழ்த்தி வணங்குகிறேன் நீடு வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மா மீண்டு வாருமம்மா

அருங்கலைகள் பெருகி வந்த
குரும்பை நகர்ப் பதிதனிலே
விரும்பி வந்து கோயில் கொண்ட
மருக்கொழுந்தே மாரியம்மா
இருநூறு ஆண்டுகளாய்
அருகிருந்து காத்தவளே
பெரும்பாவம் விளையுமென்றோ
பிரிந்து செல்லத் துணிந்தனை நீ

தைப்பூசம் மாசி மகம்
பங்குனியில் உத்தரமும்
எப்போதும் களைகட்டும்
எங்கள் மனமுனைச் சுற்றும்
முப்போதும் நின்னடியைத்
தப்பாமல் தொழுதெழுவேன்
இப்போதுன் துணையிழந்து
ஏங்குகிறேன் எங்குற்றாய்

சித்திரா பௌர்ணமியில்
பத்தர்கள் அகங்குளிரும்
சித்தத்தில் ஒளியேற்ற
வைகாசி விசாகம் வரும்
உத்தரம் பூரம் என
ஆனி ஆடி மாதம் வரும்
சத்தியமாய்ச் சொல்லுகிறேன்
சகலதையும் தொலைத்துவிட்டேன்

புரட்டாதி மாதமெனில்
பொன்வயலே புல்லரிக்கும்
அருங்காட்சி காண்பதற்காய்
ஆவலினால் மனம் ஏங்கும்
செருக்குற்ற மன்னவனின்
செய்தவறை உணர்த்துதற்கு
குரும்பையூர் மாரியம்மா - நீ
பெரும் சத்தி வடிவெடுப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது இராத்திரிகள்
உன் வசந்த மண்டபத்தில்
ஐந்து தலை நாகமதில்
அருள்பொழிய வீற்றிருக்கும்
சுந்தரவல்லித் தாயே
நின் தவக்கோலம் காண
என் மனம் ஏங்குதம்மா
எளியேனுக் கருள் புரிவாய்

வெண்புரவி மீதேறி
விஜயதசமியிலே
பண்ணிசைக்கு மடியார்கள்
பரவசத்திற் கூத்தாட
கண்ணிமைக்கும் நேரத்திற்
கடுகியே புளியடியில்
பன்னீர் வாழை வெட்டும்
பக்குவத்தைப் பார்ப்ப தெப்போ

கார்த்திகைத் திங்களிலே
கனகமணி மாலைக்காரி
நேர்த்தியாய்ப் பட்டுடுத்தி
நிறையவே நகைகள் சூடி - எமைச்
சீர்ப்படுத்த வேண்டிச்
சிறப்பு உலா வருகின்ற
காட்சியினை நாம் மீண்டும்
காண்ப தெப்போ மாரியம்மா

மார்கழி மாத மெனில்
மகிழ்ச்சியிலே மனம் நிறையும்
ஊரே திரண்டு வரும்
உன்னடியில் தஞ்சமுறும்
தேசத்து மூலை யெங்கும்
திரவியம் தேடிச் செல்வோர்
மாசற்ற சோதியுன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழித் திருவாதிரையின்
முன்பத்து நாட்களுமே
பேர்பெறு திருவெம்பாவைத்
திருவிழாக் காலமாகும்
மாரியுன் ஆலயமோ
மீளவும் பொலிவு பெறும்
"மாமனிதர்" கலைஞானி கைத்
தூரிகை உனை முத்தமிடும்

கல்வீடோ மண்வீடோ - கன
கச்சிதமாய்ச் சுத்தமாகும்
எல்லாவீடுகளும்
புலாலுணவு ஒறுத்துவிடும்
செல்லன் சின்னவன் கள்
தவறணையும் காய்ந்துவிடும்
நல்லமுத்து மாரியம்மா - எமக்கு
நம்பிக்கை தாருமம்மா

அந்தரப்பட்டு மக்கள்
அலைந்திடும் நிலையகற்றி - எம்
சுந்தரபூமி சென்று
சுதந்திரமாக வாழ
வெந்துபோயுள்ளவெம்மோர்
வேதனை விரைவில் தீர
மீண்டுநீ வந்துவிடு - எமக்கு
மீட்சியைத் தந்துவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லமை தாராயோ

வல்லமை தாராயோ எம்மவர்
வாழ்வு மீட்சியுற
நல்லதாம் தமிழீழ மண்ணில்
நரபலி குறைவு பெற
அல்லற் பட்டாற்றா தழுகின்ற
மெலிய தமிழர் மேன்மையுற
சொல்லடி மாரித்தாயே - நீ
வல்லமை யெமக்குத் தாராயோ

வல்லமை தாராயோ ஈழவர்
சேனைகள் வலிவு பெற
சன்னதம் கொண்டலையும் சிங்களப்
படையினை விரட்டிவிட
வன்னி நிலப்பரப்பை வலம்வரு
பகைவரை ஒழித்துவிட
சொல்லடி மாரித்தாயே - நீ
வல்லமை யெமக்குத் தாராயோ

வல்லமை தாராயோ நம்மவர்
மனத்திண்மையைக் கூட்டிவிட
சொல்லுதற் கரிதான எங்கள்
சோகங்கள் தீர்ந்துவிட
நல்ல மதகுருமார் நாளும்
கொல்படல் குறைந்துவிட
சொல்லடி மாரித்தாயே - நீ
வல்லமை யெமக்குத் தாராயோ

வல்லமை தாராயோ - எம்மண்
விடிவினைக் காண்பதற்கு
இல்லார், உள்ளார் அனைவரையும்
அடித்தும், உதைத்தும் துன்புறுத்தி
கல்மனக் காரர் கடத்திவைத்து
கப்பம் பெறுதல் குறைவுபெற
சொல்லடி மாரித்தாயே - நீ
வல்லமை யெமக்குத் தாரையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமை தாராயோ - எம்
வாழ்வினை நாமே வாழ்வதற்கு
நல்லநம் தேசியத் தலைவன்
மேலும் வளர்ச்சி பெறுவதற்கு
வல்லதாம் பெருவிடுதலைச் சேனை
வகையில் கருவித் தேர்ச்சிபெற
சொல்லடி மாரித்தாயே - நீ
வல்லமை யெமக்குத் தாராயோ

வல்லமை தாராயோ - ஈழவர்
வல்வினை தன்னைத் தீர்க்காயோ
கொல்லுதலும், குருதியிலே யெமைக்
குளிப்பாட்டுதலும் குறைக்காயோ
பொல்லாச்சிறையில் வாடும் தமிழன்
பொழுது விடிய வைக்காயோ
சொல்லடி மாரித்தாயே - நீ
வல்லமை யெமக்குத் தாராயோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத்தின் முதற் பொருளே

தேசத்தின் முழுமுதலே
தேசியத்தின் திருவுருவே
காசினியிற் தமிழர்க்கு
நீதானே கண்ணபிரான்

வேஷத்தை வெறுப்பவன் நீ
தோஷத்தைத் துடைப்பவன் நீ
நாசத்தைத் தடுப்பதனால்
நாராயணன் ஆகிவந்தாய்

தாழ்வுற்றுத் தளர்வுற்ற
தமிழ்க்கலைக்கு வாழ்வுதந்தாய்
ஏழ்மைமிகு பழங்கலைஞர்
வாழ்வினுக்கு வளம் சேர்த்தாய்

பொதுவாழ்வில் தமையிழந்த
பெற்றியரைப் போற்றுகின்றாய்
அறமுரைத்த ஔவைகண்ட
வளநாடு நின்னதன்றோ

சீழ்பிடித்துச் சீரழிக்கும்
சாதிக்குச் சாவுதந்தாய்
பாழ்படுத்தும் சீதனத்தின்
பாதிப்புக் குறையவைத்தாய்

சேர்ந்திருந்து பேன்பார்த்து
தூர்ந்துபோன பெண்ணினத்தை
போர்க்கருவி தோள்தாங்கும்
ஓர்மத்தால் நிமிரவைத்தாய்

தறிகெட்ட தமிழினத்தை
தலைநிமிர வைத்தவன் நீ
அடிபட்ட எம்மினத்தை
"வெடி"கட்ட வைத்தவன் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கான்”பார்த்துக் கலங்கினோம்
கடற்படையை காட்டினாய்
வான் பார்த்து ஒதுங்கினோம்
வான்பரப்பில் ஏற்றினாய்

தொடைதட்டி வந்தவரை
பொடிபட்டுப் போகவைத்தாய்
படைகட்டி நின்றவர்க்கு
பாடைகட்டத் தேதிவைத்தாய்

சிங்களத்துச் செருக்களத்தில்
கந்தகக் குழம்பாவாய்
எங்களவர் சேனையொடு
செந்தணற் களிம்பாவாய்

மங்காப் புகழ்படைத்த
மன்னவனே வாழி
மனம் பிறழா மாணிக்கமே
இனம் துதிக்க வாழி
குணம் எனும் குன்றேறிய
கரிகாலனே வாழி
தனம் நீ எங்களுக்கு
தலைவனே வாழி. வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீர தெய்வங்களே

ஈழத்தமிழ் நிலத்து
இணையற்ற தீபங்களே
சாவுக்கு அஞ்சி அஞ்சி
வாழுகின்ற மானுடரில்
சாவுக்கே தேதி வைக்கும்
சரித்திர நாயகரே
மாவீர தெய்வங்களே - உமை
மண்டியிட்டு வணங்குகின்றேன்.

ஈழத்தமிழ் நிலமே
இரத்தத்திற் குளித்திருக்க
காடு மேடு கோயிலென
கண்டபடியலைந்து
வாழ்வினையே ஏமாற்றும்
வக்கற்ற தமிழர்க்கு
நீரே காவலானீர் உமை
நித்தமும் வணங்குகின்றேன்

ஈழத்தமிழ் நிலத்தை
உருக்குலைத்து நிற்பவரை
தாய் தடுத்தாலும் கேளோம்
தயங்காதழிப்போமென
சூழுரைத்த வீரர்களே உங்கள்
ஓர்மத்தைப் போற்றுகின்றேன்
காரிருளைக் களைய வந்த
கதிரவரே வணங்குகின்றேன்.

பேய்களெல்லாம் கூடிநின்று
பிணம் தின்னும் ஆட்சியினை
மாய்க்க வந்த மறவர்களே
மாவீர தெய்வங்களே
நோய்க்கொரு மருந்தாகி
நொடிந்து போனவெம் மினத்தை
"மேய்ப்பராய்க் காப்பவரே - உமை
மேதினியே வணங்கிடுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்றிசையும் உங்கள் தாள் தொட்டு இறைஞ்சுதைய்யா

அப்பாப் பிள்ளையார் தலை மைந்தரே
அன்பினாற் தோய்த்திட்ட சிறிய தந்தையே
அனைத்துத் தமிழர்க்கும் நீர் சொந்தமே
அகிலம் வியக்கின்ற தமிழ்ச் சிங்கமே

"விக்ரோறியா" வீன்ற விளை பயிர்நீர்
விடலைப் பருவத்துச் சபை முதல்வீர்
சட்டக் கல்லூரித் தமிழ்மன்று கண்டீர்
தமிழரசு வாலிபத் தலைமையுங் கொண்டீர்

ஈர் பத்து ஏழு இளவயது தன்னில்
மார்தட்டி யாழ்நகர மண்டபத்து முன்றில்
போர்க்குணம் கொண்டங்கு நின்றிட்ட காட்சி
"சேர். ஜோன்" சிந்தையையும் மாற்றிட்ட மாட்சி

பக்குவமாய் நாட்குறித்த பதிவுத் திருமணத்தில்
பரவசமாய்க் காத்திருந்த காதல் மாதிடத்தில்
குண்டாந்தடியடியைக் கொடையாக ஏற்றுவந்து
கொள்வாய் இவற்றையென "குறி" அன்று சாற்றினிரே

முற்றவெளிப் பிட்டியோ காலிமுகத் திட்டியோ
கச்சேரி முன்றலோ "கழுவேற்று" மன்றமோ
குண்டாந் தடியடியோ குறிவைத்த கல்லெறியோ
துப்பாக்கிப் பிடியடியோ துவளாத மகராசா

எழுபதின் பொழுதுகள் ஏக்கமாய் விடிய
இளைஞரின் மனதுகள் இருளினில் கவிய
எழுகதிர் இவரென எம்மிடை வந்தீர்
அணிதிரள் தமிழரை ஆட்கொண்டு நின்றீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதறிஞர் செல்வாவை அணிசெய்த முத்தே
பேரறிஞர் புகழ்ந்துரைத்த அரசியலின் சொத்தே
நாடாளு மன்றத்து நம்பிக்கை விவாதம்
நாட்டினர் யாவர்க்கும் நீர் செய்த போதம்

ஈழத்தமிழ்த் தேசியத்தை இதயத்தால் வழிமொழிந்தீர்
இளைஞர் நெஞ்சமெல்லாம் இலட்சியத்தால் நிறையவைத்தீர்
வேள்வித் தீமூண்டு ஊழித்தீ ஆகியதோ
வேந்தே நீரும் விடுதலைக்கே ஆகுதியோ

வாழ்வாங்கு வாழ்ந்த மாண்புமிகு மன்னவரே
காவியமாய் நீரென்றும் ஞாலத்தில் மின்னிடுவீர்
ஓவியமே உள்ளொளியே ஒழுக்கத்தின் உறைவிடமே
நாற்றிசையும் உங்கள் தாள்தொட்டு இறைஞ்சுதையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் செல்வா
# நின்னையே தந்தனையோ!

தேசத்தின் விடுதலைக்காய்
தேகத்தைத் துறந்தவனே
தேசியத் தலைவனவன்
தேர்ந்தெடுத்த திரவியமே
பாசமாம் பற்றறுத்துப்
பதினேழு வயதினிலே நீ
யாசித்த விடுதலைக்காய்
நின்னையே தந்தனையோ.

உருக்குக் குண்டினையும்
உன்னுடலம் தாங்குமெனச்
செருக்களத்தில் நின்றபடி
செய்தி தந்த செயல் வீரா
பொருதிவந்த பகைவனைப்
பொடிபடச் செய்தவனே
தழும்பேற்ற தண்ணாளா
"தவளைப்பாய்ச்சலில்" வென்றவனே

"தேசத்தின் குரல்" ஓய்ந்த
சோகமின்னும் தீருமுன்னே
நேசத்தின் குரலாகப் பிற
தேசமெங்கும் வந்து நீ
வாசமல்லிப் பூப்போல
மணம் பரப்பி நிற்கையிலே
நீசர்களின் படையுன்னை,
மூச்சடைக்க வைத்ததுவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை விசாலாட்சி
அவனிக்குத் தந்த மைந்த
வன்னி மகராசன்
வளர்த்தெடுத்த தமிழ்ச்செல்வா
எண்ணித் துணிந்ததனை
எடுத்தியம்பி வந்தவனே நாம்
பண்ணிய பாவமென்ன
உன்னைப் பறிகொடுப்பதற்கு

திண்ணிய மனத்தினனே
தீரமிகு தினேஷா
மன்னாரில் சிலாவத்துறை
மருண்டதுன் திறன் கண்டு
உன்னுடைய ஓர்மத்தை
ஓயாத அலை (3) சொல்லும்
கண்ணாளா எங்களை நீ
கலங்கடித்துப் போனாயோ

எல்லாள மன்னனையே
ஏமாற்றிக் கொன்ற வம்சம்
செஞ்சோலைப் பிஞ்சுகளின்
செங்குருதி ருசித்த, வம்சம்
அஞ்சுதலறியா நீயும், மற்று
ஐவரும் சேர்ந்திருந்த
வெண்புறா வாழும் வீட்டை (அந்தோ)
வெடிகுண்டு வீசிக் கொன்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளின் கணக்கினிலே
அளப்பதல்ல வாழ்க்கை
ஆற்றுகின்ற செயல்களுக்காய்
போற்றுதலே வாழ்க்கை
சாவதற்காய் வாழ்ந்திருந்த
சரித்திர புருஷன் நீ
நாற்பதுக்குள் உன் தியாகம்
நாணிலமும் அறிந்ததையா

தீப்பந்தம் போன்ற உன்தன்
தூல வாழ்வு முடிந்தாலும் - உனைச்
சாய்த்தவர்கள் சாய்ந்தாலும்
சாயாது நின் புகழே.
வாய்த்த எங்கள் தாய்த்தலைவன்
மீட்டிடுவான் எம்மண்ணை அப்போ
வானகத்தில் நீயிருந்து
வாழ்த்த வேண்டும் ஈழமதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீறுகொண்டெழ வேண்டும்

ஈழவர் தாயகம்
காதகர் ஆட்சியில்
இரத்தம் வடிக்கிறது

இந்திய தேசம் - தன்
"தந்திரச்" சூழ்ச்சியில்
சிந்தை மகிழ்கிறது

நாமாய் அழைத்த
நோர்வே நாடும்
நாராய் வளைகிறது

அணுவைத் தின்ற
அகாசி பரம்பரை - மூளை
பிசகித் தவிக்கிறது

பாவிகள் கைகளில்
பாலஸ் தீனம்
பந்தாய் உருள்கிறது

ஆப்கான் மண்ணை
அரக்கரின் ஆயுதம்
ஆட்டிப் படைக்கிறது

ஹாப்பரின் ஆட்சியும்
கனடிய இளைஞரைக்
காவு கொடுக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக் நாட்டை
இரும்புக் கரமோ
இறுக்கிப் பிடிக்கிறது

ஆர்வ மில்லாமல்
அனைத்து உலகும்
வேடிக்கை பார்க்கிறது

எரித் திரியாவாய்
எழுந்த தேசம் - எமக்குத்
தெம்பினைத் தருகிறது

கிழக்கு தீமோராய்
நிமிர்ந்த நாடு விடுதலை
நிச்சயம் என்கிறது

அடிநிலை மாந்தரின்
ஆதிக் குடிகளின்
இழிநிலை கெடவேண்டும்

பிடியிடை மாதரும்
கடிதளை நீங்கி
களிநிலை யுறவேண்டும்

இடருறு இனங்களும்
பிடிமிகு மனங்களும்
விடுதலை பெற வேண்டும்

அடிபடு தேசங்கள்
விடிவினைக் காண
வீறுகொண் டெழ வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ.... என் கனடாவே

சங்கம் வளர்த்த சந்தனத் தமிழைப் போலும்
மங்கிடா வளம் மலிந்த மாண்புறு மண்ணே - நீ
பங்கமில் புகழினோடு பாரினில் விளங்க வேண்டியிச்
சங்கதி சொல்லுகின்றேன் சற்றே செவிமடுப்பாய்

உலகத்து நாடுகளை ஒன்றாய்க் கூட்டி வைக்க
உத்தேசம் செய்தோரால் உருவானது ஐ. நா.
அகிலத்து மாந்தரெல்லாம் அவராய்த் தேடிவந்து
அன்பைப் பகிர்ந்ததனால் ஆகிவந்த தெம் கனடா.

நூற்றுக்கு மதிகமான மொழியினைப் பேசும் மக்கள்
நாற்றுமேடையில் பதியவைத்த கன்றுகளாய்
வேற்றுமைக்குள் ஒற்றுமை சாத்தியம் தானென்பதனை
சாற்றி நிற்கின்ற சமஷ்டித் தத்துவமே

சஞ்சலம் நிறைந்த இச்சகத்தினில் வாழ்வதற்கே
அஞ்சிய மனத்தினோடு அந்தரப்பட்டலைந்த வேளை
"அஞ்சற்க மகனே, ஆறுதல் கொள்வாய்" என்றென்
நெஞ்சினிற் பாலை வார்த்த நேயததை மறக்கவில்லை.

ஆயின்,

விஞ்சிடும் அடக்குமுறை, வேரொடு அழிக்கும் முறை
அஞ்சித் தவிக்கின்ற அப்பாவித் தமிழர் குறை
நெஞ்சை அடைப்பதனால் நிலைகுலைந்து கேட்கிறேன்
கொஞ்சமேனும் பார்த்தாலென்ன குறைந்தா போய்விடுவாய்?

இருள்படு கண்டம் இன்னற் பட்டகால்
மருளாது குரல் கொடுத்த மகத்துவம் உனக்குண்டு
அணிசேரா நாடுகளை அணிதிரள வைத்ததிலும்
கணிசமான அளவிற்கு கரிசனை நீ காட்டி நின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பெருந்தலைவன் "பியர் ரூடோ" பின்னே
எந்தத் தலைவனுமே எம் ஈழத்தைக் "கண்டதில்லை"
சிந்தை நொந்து கேட்கின்றேன் சிறிதேனும் கருத்திலெடு
வெந்த புண்ணில் மேலும் வேலைப் பாய்ச்சாதே

சொல்லவேண்டியதை உன்னிடமே சொல்லிவிட்டேன்
நல்ல நாளதுவுமாய் நச்சரிக்கிறே னென்றெண்ணாதே
பொல்லாப்பு எதுவும் என் புகுந்தகத்திற்காகாது
நல்ல பிள்ளை நான் உன்னை நம்புகிறேன்

அகவை நூற்று நாற்பது உனக்கு,
ஆனந்தம் கொள்கிறேன் மேப்பிள் தேசமே
வாழி நீ மேலும் வளம் பெற்று வாழி.
ஆழி சூழுலகம் அகமகிழ வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தாந்தமும் சித்துவேலையும்

அதிகாலை

05:30 மணி

பதினொருவயதுப்

பள்ளி மாணவன்

குழம்பிய மனத்தொடு

எழுந்து வந்தான்

அப்பா.........

"ஐக்கிய சோஷலிஸ

சோவியத் ரஷியா"

ஏனிப்படி

அப்படமாய்

நொருங்கிப்போனது

"உலகத்தொழிலாளரே

ஒன்றுபடுங்கள்"

உரத்துக் கூவியோர்

உருக்குலைந்து போய்.........

அப்பா......

உங்களைத்தான்.

எனக்கும் குழம்பியது.

சித்தாந்தத்தின் தோல்வியா........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிசேரா நாடுகளை

அணியாய்த் திரட்டிய

யூகோஸ்லேவியா

அலங்கோலமாய்.......

அடிபட்டு.......

பிரிபட்டு..........

மூன்று

வெவ்வேறு முகாந்திரங்களாய்.........

பிரிவதிலும்........

பிரிப்பதிலும் மட்டுமா

கரிசனை எங்களுக்கு.

சேர்வதிலும்.....

சேர்ப்பதிலும் கூடத்தான்

கிழக்கும்

மேற்குமாய்

பிரிந்திருந்த ஜேர்மனியர்

இணைவதே இன்பமெனப்

பிணைந்து.........

பிசகேதுமின்றிப்

புழுங்குதல் மகிழ்ச்சி.

தனியாயிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து குலவின
ஆயினும்
மனசு
ஒருப்படமறுத்தது.
மீண்டும் பிரிந்தன.
கணவனும்
மனைவியும்
இணைவதும்
பிரிவதும்
நெகிழ்வுத்திறனின்
எல்லையைப் பொறுத்ததே
இனங்களாயினும்
தேசங்களாயினும்
எழுந்து நிற்றலும்
ஒன்று சேர்தலும்
உடைந்து பிரிதலும்
தாங்குதிறன்
தகர்ந்து போகும்
அந்தப் பொழுதுகளில் தான்
சித்தாந்தத்தின் தோல்வியிலோ
சித்துவேலைக்காரரின் வெற்றியிலோ அல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புடையோர் மட்டே

வாடி விட்டால் வாழாது பூவின் மணம் - உடல்
வேகிடினும் சாயாது புகழ்மணம்

பேடிபோல் வாழ்வதனால் வாராது பேர் புகழ்
நேரிய செயலினாலே நிலைபெறும் நெடும் புகழ்
ஆயுளையே அர்ப்பணித்த நெல்சன் மண்டேலா
ஆள்சேர்த்துப் பெற்றதல்ல பெம்மான் பெரும்புகழை

பூதான இயக்கத்தின் வினோபா பாவே
"சூரிய அஸ்தமனம்" தோன்றவைத்த காந்தி
காவியத் தலைவராய் அறிஞர் அண்ணா - ஏழைக்
கல்விக்கு வழிசெய்த காம ராசர்

ஈழத்துக் காந்தியாய் மூதறிஞர் செல்வா
வேழமென (வெ)குண்டெழுந்த கேணல் கிட்டு
ஞாலமே போற்றிடும் இந்திரா காந்தி - இவருடல்
வேகியே போகினும் வீழாது புகழ் மணம்

ஓய்ந்துமே ஓயாத "தேசத்தின் குரல்"
ஓய்த்துமே ஓயாத "நேசத்தின் குரல்"
சாய்ந்துமே சாயாத பொன். சிவ குமாரன்
சாய்த்துமே சாயாத குட்டிமணி தங்கத்துரை

வீழ்ந்துமே வீழாத வேங்கை திலீபன்
வீழ்த்தியும் வீழாத தராக்கி சிவராம்
மாய்ந்துமே மாயாத தளபதி பால்ராஜ்
மாய்த்துமே மாயாத மாமனிதர் குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகிய பணியின் ஏற்றம் கண்டீர் - இவருடல்
வேகியே போகினும் வீழாது புகழ்மணம்
நாடிய பணியால் நாட்டிய புகழிது
கோணிச் சேர்த்ததல்ல குன்றாப் பெரும்புகழை

பாரறிந்த கனடாப் பிரதமர் ரூடோ
ஊரறிந்த "ஊற்றாய்" அன்னை திரேசா
ஆள் வைத்துச் சேர்க்கவில்லை
அள வில்லாப் பெரும்புகழை

தேடித்தேடிச் சேர்க்கின்ற புகழ் மணம்
கூடிடும் ஆட்கள் குறைந்திடத் தேய்ந்திடும்
நாடி நாடிச் சேர்கின்ற மாண் புகழ்
நாடிடும் ஆட்களை நாளும் சேர்த்திடும்

வாடிவிட்டால் வாழாது பூவின் மணம் - உடல்
வேகிடினும் சாயாது புகழ் மணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றிப் போற்றுவோம்
# இணைந்து முன்னேறுவோம்

எல்லோரும் வருக எம்முடனே இணைக
நல்லோர் நாட்டினை நாமிங்கு செய்வோம்
என்றெமை அழைத்த இனிய தேசமே
நனறே வாழி! நலம் பெற்று வாழி!

ஈழத்து மண்ணை இரணியர் ஆட்சி
பாழ்படுத்திப் பசி தீர்த்த போது
அன்னை பூமியில் அகதியாய் மாறி
அலைந்து குலைந்து அவதிப்பட்டோம்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
அன்பே எங்கள் உலக தத்துவம்
மேப்பிள் தேசம் எண்பதிலெங்களைத்
தேற்றி அணைத்துத் தெம்பு தந்தது

மொன்றியல் நகரத் தமிழர் ஒன்றியம்
முதல் தமிழ் வானொலி "தமிழ் ஒலி"
முன்னே மலர்ந்த "விழிப்பூ"
அன்றைய நாளில் ஆரம்பப்பதிவுகள்

ஈழத்தமிழனின் இடப்பெயர்விற்கு
இப்போ வயது இருபத்து ஐந்து
இன்றைய போழ்தில் எம்மவர் வளர்ச்சி
இமாலய உச்சி என்கிறார் மெச்சி

மண்ணை நேசித்து மனங்களை யாசிக்கும்
பல்கலாச்சார வானொலிச் சேவைகள்
"எண்ணுதற்கெட்டா" தெழுந்து வருகின்ற
மண்ணின் மணம் சேர் புதினத்தாள்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுலகத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதில் கிடைத்திட
பண்ணவன் மலரடி பணிந்து போற்றிடப்
பண்ணிய கோவில்கள் பலவுண்டு இங்கே

அணுவிஞ்ஞானியாய் கணனி விற்பன்னராய்
அனர்த்தம் செய்யும் ஆழிப்பேரலையை
அவதானிக்கக் கருவி கண்டோராய்
அயராதுழைக்கும் ஆற்றல் படைத்தோம்

கனடிய கீதம் இசைத்தலிற்கூட
கடுமையாய் மோதி வென்றவர் நாங்கள்
ஒன்பது வயதில் "கோல்ப்" விளையாட்டில்
ஓங்கி ஒலித்தவர் எம்மவர் பிள்ளை

ஆயினும் இங்கே அடிக்கடி சறுக்கல்
நாயினும் கடையாய்க் கிடக்கும் இழிநிலை
வேகமாய்க் களைவோம் விரைந்து செயற்படுவோம்
பூமியில் தமிழன் புகழினைக் கூட்டுவோம்

பல்கலாச்சாரம் வளர்கின்ற வீட்டை
எல்லோருமிணைந்து வாழ்கின்ற கூட்டை
பாருக்குள் நல்ல பண்பட்ட நாட்டை
ஏற்றிப் போற்றுவோம் இணைந்து முன்னேறுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகே.....அழகு

இரவுச் சேலை உடுத்தும் போதும்
இயற்கை அன்னை அழகுதான்
இதயச் சுவரில் சோகம் தூங்கும்
இருந்தும் வாழ்க்கை அழகுதான்

பருவம் பார்த்துப் பதுங்கிவாழும்
மேப்பிள் மரமும் அழகுதான்
உறுதியாக நிமிர்ந்து நிற்கும்
பைன் மரமும் அழகுதான்

புறம் பேசும் பெருமறிஞர்
அரங் கேறி வந்து
நிறைகுடமே வாழியென
நித்தம் துதிபாடுவதும்
பித்தம் தலைக்கேறிப்
பிலாக்கணங்கள் பாடுவதும்
சத்தமாய் கேட்கிறதே - இது
சரியான அழகுதான்.

காகம் வந்த போது மதைக்
கலைத்திடாத எச்சிற்கைகள்
நாடுவிட்டு நாடு வந்து
நன்றாய் வாழும் போதிலும்
நாதியற்ற முதியவர்க்கு
நல்ல தொண்டு செய்வதாய்
காசு பண்ணும் கைங்கரியம்
கனடாவில் அழகுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“காட்“ அடித்துக் காசெடுத்துக்
கல்யாணம் நடத்தலும்
“மட்டை“ தேய்த்து மகிழ்ச்சியாக
மாளிகைகள் வாங்கலும்
“பச்சை”யிலே வாற காசை
பக்குவமாய்ச் சுருட்டலும்
கச்சிதமாய் நடக்குதே இது
காண்பதற்கு அழகுதான்

பெற்றவரைப் பிள்ளைகளே
“நற்றமிழா“ல் வைவதுவும்
உற்றவளைக் கொண்டவனே
உள்ளறையில் அடைப்பதுவும்
கற்றவரே ஒரு சேர்ந்து
கடவுளரை விற்பதுவும்
நற்றமிழர் பண்பாட்டில்
நிச்சயமாய் அழகுதான்

இரவுச் சேலை உடுத்தும் போதும்
இயற்கை அன்னை அழகுதான்
இதயச் சுவரில் சோகம் தூங்கும்
இருந்தும் வாழ்க்கை அழகுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிய மனங்கள் மாறிட வேண்டும்

வலிய மனங்கள் மாறிட வேண்டும்
மெலியரும் வாழ்வில் மகிழ்வுற வேண்டும்
நலிவுறு மக்கள் நலம்பெற வேண்டும்
பொலிவுறு ஈழம் பூத்திட வேண்டும்

கொடியவர் கீழோர் திருந்திட வேண்டும்
கொடுஞ்சிறை கொண்டோர் விடுபட வேண்டும்
அடுத்தவர் நலனில் அக்கறை வேண்டும்
அனைவரும் அவனியிற் சுகம்பெற வேண்டும்

வலியரும் மெலியரும் சமப்பட வேண்டும்
வல்லர சாயினும் நல்மனம் வேண்டும்
சொல்லும் செயலும் ஒருப்பட வேண்டும்
சோர்விலா தனைவரும் உழைத்திட வேண்டும்

வெற்றுப் பேச்சினை விட்டிட வேண்டும்
பற்றுடன் அனைவரும் செயற்பட வேண்டும்
பக்கச் சார்பு பாழ்பட வேண்டும்
பாரத தேசம் மாறிட வேண்டும்

"மந்தரை" சூழ்ச்சி நின்றிட வேண்டும்
இந்திராத் தாயின் இதயம் வேண்டும்
"பொன்மனச் செம்மலின்" மனசு வேண்டும்
"நெஞ்சுக்கு நீதி"க் குறுதி வேண்டும்

கொஞ்ச மாயினும் நேர்மை வேண்டும்
வஞ்ச மில்லாத "டெல்லி" வேண்டும்
குஞ்சரம் ஏறிடும் "பிரியம்" வேண்டும்
நஞ்சு கலக்கா நட்பு வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கின் "ஞானம்" வலுப்பெற வேண்டும்
மேடை அரசியல் தளர்வுற வேண்டும்
மாற்றுக் குழுக்களும் மாறிட வேண்டும்
காட்டிக் கொடுக்கா கண்ணியம் வேண்டும்

போகும் வயதில் புண்ணியம் வேண்டும்
"ஆகும்" நேரம் அமைதி வேண்டும்
ஆக்கம் மிக்க விமர்சனம் வேண்டும்
அழி வில்லாத கூட்டணி வேண்டும்

எம்மை நாமே அழித்திட வேண்டாம்
இம்மையில் எமக்கு இழப்புகள் வேண்டாம்
செம்மையாய் அனைவரும் ஒன்றாக வேண்டும்
சேர்ந்த தேசம் நன்றாக வேண்டும்

நலிவுறு மக்களை நசித்திட வேண்டாம்
வலியரை மேலும் வளர்த்திட வேண்டாம்
மெலியரும் வாழ்வில் மகிழ்வுற வேண்டும்
பொலிவுறு ஈழம் பூத்திட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சறுக்கல்கள்

பனி பெய்யும் பருவத்து
மாலை நேரம் - நிலம்
பளிங்குக் கல் பதித்த
தரையாக மாறும்.

பள்ளிச்சிறார் மகிழ்ந்து
பனித்தரையிற் சறுக்கிடுவர்
வெள்ளி நில மகளை
வீழ்ந்து தழுவிடுவர்

கள்ளமிலா மனசுகளின்
கால் சறுக்கும் வித்தைகளை
மெல்ல ஒதுங்கி நின்று
வேடிக்கை பார்ப்பர் மற்றோர்

வேணுமென்றே சறுக்குவதும்
வீழ்ந்தெழும்பிப் போவதும்
பனித்தரையில் மட்டுமல்ல
பண்பு கெட்ட வாழ்விலும்தான்

நாளாந்தம் நம் வாழ்வில்
காணுகின்ற சறுக்கல்கள்
ஏராளம் இருந்திடினும்
எதுவும் நாம் கண்டிடோம்

போலியாய் விளம்பரங்கள்
புகழுக்காய்ச் சமூகசேவை
காசுக்காய்த் தொண்டு செய்தல்
கனடாவில் தாராளம்

பள்ளிச் சிறார் மகிழ்வாய்
பனித்தரையிற் சறுக்கிடலாம்
நன்றாய்ப் படித்தவரே
நாளாந்தம் சறுக்குவதேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செக்கச்சிவந்த........

அவள். அவளேதான்
அழகு. அத்தனை அழகு
அளவு. அளவான அளவு
ஊரில்
இவளை
நான் பார்த்திருக்கிறேன்
உள்ளூர்க்காரியென்பதால்
உள்ளம்
அவ்வளவாய் உன்னவில்லை.
ம்............
ஊர்ப்பழக்கந்தான்........
இருபது வருஷத்தின் பின்னால்
இப்போ..........
இங்கே பார்க்கின்றேன்.
அவள் அழகும் தெரிகிறது
அருமையும் புரிகிறது
மெதுவான மேனியின்
மினுமினுப்பு
என்னை உரிக்கிறது
அவள்மீது வைத்தகண்
அகலவே மறுக்கிறது
அவளும்
என்னைத்தான்
"அப்படிப்" பார்ப்பது போல்..........
மாசு மறுவற்ற தேகம்
மெலிதான அந்தத் துணியில்
மறைந்து, மறைந்து தெரிகிறது.
முன்புறத்தே
அந்தக் கருமையான முகில்
அப்படியே
பட்டவர்த்தனமாய்......சே
என் உடம்பெல்லாம்
என்னவோ செய்கிறதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே..............
அவளை என் கையினால்.......
இந்த வயதிலும்
ஏன் நான் இப்படி......
ஆசைக்கு வயசில்லைத்தான்....
என்னைக் கட்டுப்படுத்த
என்னால் முடியவில்லை
வருவது வரட்டும்......
அப்படியே நெருங்கி
அவளை
என் கையால்
...............................................
வாயருகே.........
"என்னப்பா
எங்க நிக்கிறியள்
அதுவும் மறந்து போச்சே"
என் மனைவி ஓடிவந்து
என் கையைப் பிடித்தாள்
நான்
பிடித்திருந்தவளின் பிடியை
இன்னமும் இறுக்கினேன்
பிதுங்கி விடுவாள் போலிருந்தது
அப்படியே..............
மீண்டும்
வாயருகே.......
என்மனைவிக்கு
பொறுக்கமுடியவில்லை.
என் கையைத்தட்டினாள்
நான் பிடித்திருந்தவள்
என் கை தவறி வீழ்ந்து விட்டாள்
விசர் பிடித்தவன்......போல.....நான்
மீண்டும்
நிலத்தில் கிடந்தவளை
அணைக்கத் துடித்தேன்.
அவளைக் கடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதற வேண்டும் போல்
எனக்குள் ஒரு வெறி.
மனைவி
இப்போ
பொறுமையிழந்து போனாள்
"மானம் மரியாதை
ஒண்டும இல்லையே...."
ஏனிப்படி நடக்கிறியள்
என் கையைப்பிடித்து
என்னவள் இழுக்கிறாள்
என் மனம்
அங்கே இழுக்கிறது.
அதற்குள்
எங்கிருந்தோ வந்த
இளைஞன் ஒருவன்
அவளை வாரியிழுத்தபடி
ஓடினான்.
என்னால்
பெருமூச்சு மட்டும்தான்
விட முடிந்தது
இருபது வருடத்தின் பின்னாலும்
அவளைப் பார்க்கத்தான் முடிந்தது
கைக்கெட்டியவள்
என்
வாய்க்கு எட்டவில்லை
ம்.....
செக்கச் சிவந்த
செம்பாட்டான் மாம்பழம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமும் தமிழும்

சைவமும் தமிழும்
தமதிரு கண்ணென
வையம் முழுவதும்
'வாய்ப்பாடு' பாடுவோர்
மெய்ப்பொருளைப் பூசிக்க
மேன்மைத் தமிழொறுத்து
கைவிட்ட மொழியினைக்
காவிக்கொண்டலைவதேன்?

சொல்லுகின்ற பாட்டின்
பொருளுணர்ந்து சொல்வோரே
செல்வதற்கு விரும்புகின்ற
சிவபுரத்தைச் சேர்வரென
வல்லமணிவாசகனார்
பாடிவைத்த வாசகமும்
புல்லாகிப் பூடாகுமிப்
புழுக்களுக்குப் புரியலையோ?

விதேசிய மதத்தையெம்
வீட்டிற்குக் கொண்டுவர
வீரமா முனிவராக
மாறிவந்தார் பாஸ்கி
சுதேச மதத்தவர்க்குச்
சுந்தரத்தமி ழாகாதோ
"சுக்லாம் பிரதட்சண"த்தின்
சூட்சுமந்தான் யாதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழீழத்தின் தூய
தமிழ்க்கிராமங்களில் ஒன்று
குரும்பசிட்டி. இதன் பெயரே
அதனைக் கூறி நிற்கின்றது.

ஈழகேசரி பொன்னையா,
இரசிகமணி கனக செந்திநாதன் ,
கலைப் பேரரசு
ஏ.ரி.பொன்னுத்துரை என்ற
பெரியோர்கள் குரும்பசிட்டியின்
புகழ்த் தூண்கள். குரும்பசிட்டி
சன்மார்க்க சபை இக்கிராமத்தின்
ஒளிவிளக்கு.

இந்தப் பாரம்பரியத்தில் வந்த இளையவர் குரும்பசிட்டியூர் ஐ.ஜெகதீஸ்வரன். பிறந்த மண்ணின் புகழை என்றும் சுவாசித்துக் கொண்டிருக்கும் இனியவர் இவர்.

தமிழியல் பரப்பில் கவிதை, கதை, கட்டுரை, விமர்சனம் என்று பல விழுதுகளைப் பரவவிட்டு, பெயர் பெற்றுத் துலங்குபவர் ஜெகதீஸ்வரன்.

புகலிடமெங்கும் தமது ஊர்ப்பற்றை வியந்தோம்பும் வகையில் அமைப்பை உருவாக்கி, அர்ப்பணிப்புடன் ஆவன செய்துவரும் நற்பண்பாளர் இவர்.

'இவர்களும் மனிதர்கள்' என்னும் இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி, இவரின் 'குற்றம் குற்றமே' என்ற இயல்பினை எடுத்தியம்பி நிற்பது. இந்தாண்டில் வெளிவரும் குரும்பசிட்டி வரலாறும் , கவிதைத் தொகுதியும் தாய்மண், பெற்றதாய் ஆகிய இரண்டுக்குமான நன்றிக்கடன்.



நீண்ட நெடிதுயர்ந்த எழுத்துலகம்
இவரது படைப்புகளை
எதிர்பார்த்துள்ளது.

திரு எஸ். திருச்செல்வம்
முதன்மை ஆசிரியர்
தமிழர் தகவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org